# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

## 2024/2025

# தமிழ்

## ஆண்டு 10

நேரம்: 180 மணித்துளிகள்

நாள்: சனிக்கிழமை

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 18

சுட்டெண் :

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3 4

1. திருக்குறளில் தென்புலத்தார் என அழைக்கப்படுவோர்
    1. விருந்தினர்
    2. முன்னோர்
    3. பெற்றோர்
    4. சுற்றத்தார்

2. கலிங்கத்துப்பரணி இயற்றப்பட்ட காலம்
    1. பல்லவர்
    2. சங்ககாலம்
    3. சோழர்
    4. சங்கமருவிய காலம்

3. ‘பூவும் மணமும் போல’ என்னும் உவமைத்தொடரின் பொருள்
    1. ஏமாற்றம்
    2. பகை
    3. தெளிவு
    4. ஒற்றுமை

4. மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவன
    1. செய்தித்தாள்கள்
    2. கல்வெட்டுகள்
    3. இலக்கியங்கள்
    4. குடும்பங்கள்

5. நாட்டுப்புறக் கலைகளுக்குள் அடங்காதது
    1. காவடி
    2. பரதம்
    3. கரகம்
    4. கும்மி

6. கறையானின் வாழிடம்
    1. குகை
    2. பட்டி
    3. புற்று
    4. கூடு

7. முழுமையாகக் கிடைக்காத காப்பியங்களுள் ஒன்று
    1. மணிமேகலை
    2. சிலப்பதிகாரம்
    3. சீவகசிந்தாமணி
    4. வளையாபதி

8. இரட்டுற மொழிதல் என்பதன் பொருள்
   1. இருமுறை பேசுதல்
   2. இருபொருள்படப் பேசுதல்
   3. வன்சொல் பேசுதல்
   4. இன்சொல் பேசுதல்

9. வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை ஆக்கிக் கொள்ளும் கலை
   1. கவின்கலை
   2. சிற்பக்கலை
   3. பயன்கலை
   4. இசைக்கலை

10. எழினி என்றால்
   1. எழில்
   2. மலர்மாலை
   3. விளக்கு
   4. திரைச்சீலை

11. இறைநெறிக் காலம் என்பது
   1. அறநெறிக்காலம்
   2. பக்தி இயக்கக் காலம்
   3. சிற்றிலக்கியக் காலம்
   4. காப்பியக் காலம்

12. ஒரு சொல் இருமுறை தொடர்ந்து வருவது
   1. பழமொழி
   2. உவமையணி
   3. அடுக்குத்தொடர்
   4. அடுக்கிடுக்குத்தொடர்

13. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ப்புலவர்களின் வாழ்க்கைநிலை
   1. மகிழ்ச்சியானது
   2. வறுமையானது
   3. பெருமையானது
   4. அழகானது

14. வளர்தல் என்பதன் எதிர்ப்பொருள்
   1. அழித்தல்
   2. தேய்தல்
   3. ஒழித்தல்
   4. விரித்தல்

15. சென்ற இடமெல்லாம் புகழ் பெறுவோர்
   1. மன்னார்
   2. செல்வந்தர்
   3. கற்றவர்
   4. வறியோர்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

16. சோழர்காலத்தில் இயற்றப்பட்ட இலக்கணநூல்களுள் ஒன்று
   1. தண்டியலங்காரம்
   2. தொல்காப்பியம்
   3. பெரியபுராணம்
   4. நளவெண்பா

17. இடுகுறிப் பொதுப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு
   1. வாழை
   2. அணி
   3. வானொலி
   4. காய்

18. கொண்டாட்டங்கள் தருவது
   1. துன்பத்தை
   2. புத்துணர்வை
   3. வேறுபாட்டை
   4. பகையை

19. விளாங்காய் என்பதன் பிரிப்பு வடிவம்
   1. விளாங் + காய்
   2. விழா + காய்
   3. விலா + காய்
   4. விளா + காய்

20. அரங்கேற்றுக்காதை என்ற பகுதி இடம்பெற்ற இலக்கியம்
   1. கலித்தொகை
   2. சிலப்பதிகாரம்
   3. நற்றிணை
   4. புறநானூறு

21. சுட்டெழுத்துகளுள் ஒன்று
   1. எ
   2. ஆ
   3. உ
   4. ஓ

22. நனி, கழி, கூர், சால என்பவை
   1. பெயர்ச்சொற்கள்
   2. வினைச்சொற்கள்
   3. உரிச்சொற்கள்
   4. உவமையுருபுகள்

23. ஈழத்தமிழரின் போராட்டத்துக்கான காரணங்களுள் முதன்மையானது
   1. செல்வச் சிறப்பு
   2. உரிமை மீட்பு
   3. வெளிநாட்டு வாழ்வு
   4. கல்விச் சிறப்பு

24. இல்லறத்தார் அஞ்சவேண்டியது
   1. பகைக்கு
   2. நல்வழிக்கு
   3. பழிக்கு
   4. அன்புக்கு

25. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு
   1. வாடி வதங்கி
   2. கொதிகொதித்து
   3. படித்துப்படித்து
   4. வெதுவெது

26. சார்பெழுத்துகளுக்குள் அடங்கும் எழுத்துக் கூட்டம்
   1. க், க
   2. ட், ஞ்
   3. ஆ, இ
   4. மு, மூ

27. ஐந்திலக்கணங்களுள் ஒன்று
   1. இடைச்சொல்
   2. பொருள்
   3. வினை
   4. ஆகுபெயர்

28. ஆள்புலம் இழத்தல் என்பதன் பொருள்
   1. காட்டை இழத்தல்
   2. உறவை இழத்தல்
   3. பணத்தை இழத்தல்
   4. நிலத்தை இழத்தல்

29. மாதவியின் ஆடல் திறனுக்கு மன்னன் கொடுத்த பரிசுப் பொருள்
   1. பொன் முடிச்சு
   2. வெள்ளி நகை
   3. தலைக்கோல்
   4. பணப்பொதி

30. சோழர்காலம் பொற்காலமென அழைக்கப்பட்டது. இச்சொல்லியம்
   1. செய்வினை
   2. செயப்பாட்டுவினை
   3. தன்வினை
   4. பிறவினை

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

30x1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இராமச்சந்திர கவிராயரின் பாடல்கள் எப்படிப்பட்டவை?

2. சோழர்காலத்தில் இயற்றப்பட்ட சிறுகாப்பியங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.

3. திருவள்ளுவர் இல்லறத்தைப் போற்றுவதற்கான காரணம் என்ன?

4. ஏவல் சொல்லியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு எழுதுக.

5. பகுதி, நிகழ்கால இடைநிலை, சாரியை, ஆண்பால் விகுதி என்பவை பொருந்தும் வகையில் பகுசொல் ஒன்று எழுதுக.

6. நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருளில் வரும் வேற்றுமை எது?

7. செயப்படுபொருள் குன்றியவினைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

5x2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

அறிவைப் பெறும் ஆவலானது நூல்களைத் தேடி வாசிக்கும் பழக்கத்தை உருவாக்குகிறது. சிலருக்கு இப்பழக்கம் இயல்பாகவும் சிலருக்குக் குடும்பப் பின்னணியாலும் ஏற்படலாம். ஒரு நல்ல நூல் என்பது ஒருவரை நல்வழிப்படுத்தும் உற்ற தோழனாக அமையும். புதியவற்றை அறிதலானது ஒருவரது உள்ளத்தில் புத்துணர்வை ஏற்படுத்தும். இவ்வுணர்வு, வாசிக்க வேண்டுமென்ற உந்துதலை அதிகப்படுத்துகிறது. வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் காதோடும் கண்ணோடும் மட்டும் நின்று மறைந்துவிடும். இவை உள்ளத்தைச் சிறிதளவு தொட்டுவிட்டுச் செல்லும் தன்மை வாய்ந்தன. ஆனால், நூல்களை வாசிப்பதன் மூலம் பெற்ற அறிவோ பசுமரத்தாணி போல் மனத்தில் பதிந்துவிடும். வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் ஓரிடம் நூலகமாகும். இது எமக்குத் தேவையான நூல்கள், செய்தித்தாள்கள், இதழ்கள் போன்றவற்றைச் செலவின்றி பெற்றுக் கொள்ள உதவுகின்றது. இவ்வுலகில் நாம் அறிய வேண்டியவை நிறைந்து கிடக்கின்றன. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என்பது பழமொழி. எமக்குத் தெரியாதவற்றை அறிந்து கொள்ள உதவும் வாசிப்புப் பழக்கத்தைச் சிறு அகவையிலிருந்தே நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

**தமிழ்:**

**எனது நகரத்தில் பேரங்காடி ஒன்று உள்ளது. அங்கு ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான மக்கள் வருகின்றனர். இந்த அங்காடியில் நடக்கும் இசை, நடனம் போன்ற நிகழ்ச்சிகள் மக்களைக் கவர்கின்றன. பொருள்களை வாங்குவோர் விற்போர், பார்வையாளர்கள் என எந்நேரமும் கடைகள் சுறுசுறுப்பாகக் காட்சியளிக்கின்றன. இங்கு வேலை செய்வோர் கடைக்கு வருவோரை அன்புடன் வரவேற்று, அவர்களுக்கு உதவி செய்வதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கும். உணவுகள் விற்கும் கடைகள் உள்ள பகுதியில் வெவ்வேறு நாட்டு உணவு வகைகளைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவற்றின் மணம் பசியைத் தூண்டும். கடைக்கு வருவோரில் பலர் இங்கு அமர்ந்து கதைகள் பேசியபடி உணவைச் சுவைத்துக் கொண்டிருப்பர். அங்காடியின் ஓரிடத்தில் சிறுவர்கள் விளையாடுவதற்காக அமைக்கப்பட்ட இடம் பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். இங்கு பெரியவர்கள் தங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடும் காட்சியைக் காணலாம். இக்காரணங்களால் எனக்குப் பேரங்காடிக்குச் செல்வதென்றால் மிகவும் விருப்பம்.**

10 புள்ளிகள்

**வாழிடமொழி**

## 5 தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

அ. 'ஒன்றிணைவோம் நாம்....' என்று தொடங்கி, ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

ஆ. படத்துக்கான கவிதையை ஆறு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.




இ. பாடலுக்கான பொருளுரையை எழுதுக.

பாடு படுவர்க்கே இந்தப் பாரிடம் சொந்தமையா!
காடு திருத்திநல்ல நாடு காண்ப தவரல்லவோ!
வாழ வேண்டுமெனில் தொழில்கள் வளர வேண்டுமையா!
ஏழை என்றொருவன் உலகில் இருக்க லாகாதையா!

10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழர் புலப்பெயர்வு
2. இல்வாழ்க்கை
3. சமூகவலைத்தளங்களும் மாணவரும்

    **உள்ளடக்கக் குறிப்புகள்:**
    - ஊடகங்களில் சமூகவலைத்தளங்களின் பங்கு
    - சமூகவலைத்தளங்கள் பயன்பாடுகள்
    - மாணவர் அடையும் நன்மையும் ஏற்படக்கூடிய தீமையும்
4. தொழிற்கல்வி

    **உள்ளடக்கக் குறிப்புகள்:**
    - வேறுபட்ட தொழில்கள்
    - புலம்பெயர்நாடுகளில் தொழிற்கல்விக்கான வாய்ப்புகள்
    - நான் விரும்பும் தொழிலும் அதற்கான முன்னெடுப்புகளும்

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

**இவ்வுலகில் மாந்த இனம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை மாந்தவியலில் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு மாந்தரும் இணைந்து குடும்பமாகவும் குடும்பங்கள் ஒன்றிணைந்து குமுகமாகவும் பல குமுகங்கள் இணைந்து நாடாகவும் உருப்பெறுகின்றது. இவற்றுள் குடும்பம் என்பது மாந்த வாழ்வில் முதன்மைப் பங்கு வகிக்கிறது. ஒரு குடும்பம், பல விழுதுகளைப் பரப்பும் ஆலமரமாகவும் ஆண்டாண்டு காலமாக நீண்ட மரபுகளைத் தாங்கும் கால மரமாகவும் விளங்குகிறது. அது அன்புடைமை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல், பொறுமை போன்ற பல நற்குணங்களை எமக்குக் கற்றுக் கொடுக்கிறது. இவை எம் மனங்களை செம்மைப்படுத்துகின்றன; வாழ்க்கைக்கு நல்வழிகாட்டுகின்றன. தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா எனத் தொடரும் உறவுமுறைகள் காட்டும் வழிகாட்டல்கள் எம்மை வலுவுள்ளவர்களாக ஆக்குகின்றன. இன்றைய காலகட்டத்தில் குடும்ப அமைப்பு முறை மாறிக்கொண்டு வருகிறது. மூன்று தலைமுறையினர் ஒன்றாக வாழ்ந்த கூட்டுக்குடும்ப அமைப்புமுறையானது, தாய் தந்தை பிள்ளைகள் ஆகியோர் சேர்ந்து வாழும் தனிக்குடும்பமாக இன்று மாறிவிட்டது. இதற்கு வாழும் சூழல், மாந்த சிந்தனை, பொருண்மியம் போன்றவை காரணங்களாகின்றன.**

1. குடும்பம் கற்றுக் கொடுக்கும் நற்குணங்களுள் இரண்டினை எழுதுக.

______________________________

2. கூட்டுக்குடும்ப அமைப்பு முறை என்றால் என்ன?

______________________________

3. எம்மை வலுவுள்ளவர்களாக ஆக்குபவை எவை?

______________________________

4. குடும்ப அமைப்பு முறை மாறுவதற்குக் காரணங்கள் எவை?

______________________________

5. குடும்பம் காலமரமாக விளங்குவதற்குக் காரணம் என்ன?

______________________________

5x2 = 10 **புள்ளிகள்**

**2. தொலைபேசி உரையாடலை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.**

முருகன்: வணக்கம் ஆசிரியரே! நான் உங்கள் வகுப்பு மாணவன் நிலவனின் அப்பா முருகன் கதைக்கிறேன்.

ஆசிரியர்: வணக்கம் முருகன்!

முருகன்: தமிழ்ப்பள்ளியில் நடக்கவிருக்கும் தைப்பொங்கல் விழா பற்றி
அறிந்தேன். இம்முறை பத்தாம் ஆண்டில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் இணைந்து தைப்பொங்கலைப் பற்றி ஓர் ஒப்படை செய்ய வேண்டுமென நீங்கள் அறிவித்ததாக மகன் சொன்னார். அதைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ந்தேன். தைப்பொங்கல் தமிழர் இனக் கொண்டாட்டங்களுள் ஒன்று என்பது மகனுக்குத் தெரிந்திருந்தாலும் அதைப் பற்றி இன்னும் விரிவாக அறிந்து கொள்ள அவருக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி. இதைச் சொல்லத்தான் உங்களை அழைத்தேன்.

ஆசிரியர்: மகிழ்ச்சி! நன்றி!

1. அப்பாவும் மகனும் இவ்வுரையாடலில் கலந்து கொண்டார்கள். ( )

2. தமிழ்ப்பள்ளியில் தைப்பொங்கல் விழா நடக்கவுள்ளது. ( )

3. பதினோராம் ஆண்டு மாணவர்கள் ஒப்படை செய்கின்றார்கள். ( )

4. தைப்பொங்கல் தமிழர் இனக்கொண்டாட்டம் என்பது நிலவனுக்குத் தெரியும். ( )

5. நிலவன் தைப்பொங்கலைப் பற்றி ஒப்படை செய்வதால் அதைப்பற்றி விரிவாக அறிந்து கொள்வார். ( )

5x1 = 5 புள்ளிகள்

## பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

### எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |

### வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |